**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவனம்- 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1985 இன் 02 ஆம் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவன விதப்புரையின் 20 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 570 | உரிய பணி நிறைவடைந்து 2 வருடங்களை விஞ்சிய ரூபா 35,000 பெறுமதியான 2 கேள்வி வைப்புகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவிப்பதாக எதிர்வரும் நிதிக் குழுவிற்கு சமர்ப்பித்து நிறுவனத்தின் வருமானத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 105(2) | காணாமற்போயிருந்த 808 புத்தகங்கள் மற்றும் 515 சஞ்சிகைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விசாரணை அறிக்கை பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பதும், களனிப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகரின் கண்காணிப்பின் கீழ் வாசிகசாலைப் புத்தகங்களின் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அந்த மெய்மையாய்வு அறிக்கைகள் களனி பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்ட போதிலும், இது வரையிலும் வாசிகசாலைப் புத்தகங்களின் மெய்மையாய்வு மேற்கொள்ள உரிய ரேம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 சனவரி 03 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 04(i) ஆம் பிரிவு | வாசிகசாலைப் புத்தகங்கள் 100,000 இனை விட குறைவாக காணப்படும் எனின், வாசிகசாலை பொருட்களை வருடாந்தம் மெய்மையாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் வாசிகசாலையில் காணப்பட்ட 18,672 புத்தகங்களுக்கு 2019 ஆம் ஆண்டின் பின்னர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணாமற்போன புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் தொடர்பிலாக பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையிலும் வாசிகசாலைப் புத்தகங்களின் மெய்மையாய்வு மேற்கொள்ள வேண்டாம் என 2022 ஒக்தோபர் 12 ஆந் திகதி இடம்பெற்ற 25 ஆவது வாசிகசாலை மதியுரைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது என்பது. | சுற்றறிக்கை விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 நவம்பர் 17 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் | 2023 ஆம் ஆண்டின் நடாத்தப்பட்ட 5 பாடநெறிகளின் 15 பாடங்களின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 3 | ஒப்படைப்புகளை சமர்ப்பிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த திகதிகள் விடயத்திற்கு பொறுப்பான | சுற்றறிக்கை விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழச் சுற்றறிக்கை | மாதங்கள் முதல் 5 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. | பேராசிரியர்களால் மாணவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் நீடிப்பு செய்யப்பட்டிருந்தமையும், சில வினாத்தாள் திருத்துபதவிகள் வெளிநாடு சென்றிருந்தமையால் மற்றும் பாதகமான சுகாதார நிலைமைகள் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பரிசோதகர்களுக்கு அனுப்பி திருத்தியமையால் குறிப்பிட்ட காலம் கடந்திருந்தது என்பது. | |
| (உ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(ii) | ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 6 மாத காலப்பகுதியினுள் அந்த ஆராய்ச்சியின் செயன்முன்னேற்றம் தொடர்பில் உள்ளக ஆராய்ச்சி அறிக்கையொன்று ஆராய்ச்சி குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அந்த குழுவினால் எதிரகாலத்தில் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு அங்கீகரிக்காது 2023 ஆம் ஆண்டின் போது 9 உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சிப் படிகளாக ரூபா 4,447,297 செலுத்தப்பட்டிருந்தது. | ஏதேனும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகள் காரணமாக ஏற்பட்ட தாமதம் இந்த நிலைமைக்கு தொடர்ச்சியாக தாக்கமளித்துள்ளது என்பதும், எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். | சுற்றறிக்கை விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 21,929,331 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,181,409 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 18,747,922 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீண்டெழும் மானியங்கள் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொல்பொருளியல் மற்றும் அதனுடன் தொடர்படைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள மற்றும் உயர் கல்வியை வழங்கும் ஆசியாவின் சிறப்புவாய்ந்த நிலையமாகும் நோக்குடன் செயற்படும் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு 2023 ஆம் ஆண்டின் போது எந்த வெளிநாட்டு மாணவரும் கல்வி அல்லது ஆராய்ச்சிப் பணிகளுக்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களை கவர்வதற்க உரிய மேம்படுத்தல் வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய பாடநெறியொன்றை மேம்படுத்துவதற்கு Face book போன்ற சமூக ஊடகங்களின் மூலம் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான விளம்பரமொன்று மேற்கொள்ளப்படுகின்றது. | நிறுவனம் தாபிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவவதற்காக மிகவும் பொருத்தமான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் 6 பட்டப் பாடநெறிகளுக்கு 82 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 10 மாணவர்கள் அல்லது அதனிலும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் பதிவு செய்திருந்த பட்டப் பாடநெறிகளின் எண்ணிக்கை 3 ஆகும். பாடநெறிகளுக்கான மாணவர்களின் ஈர்ப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் பாடநெறி வருமானத்தின் அதிக அளவானது ஆரம்ப கிரயத்தையேனும் ஈடுசெய்ய முடியாதிருந்தது. | பாடநெறியின் விரிவுரைகளை மேற்கொள்ள தேவையான ஆகக் குறைந்த மாணவர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்படாத பாடநெறிகள் உரிய ஆண்டில் நடாத்தப்படாததுடன், அந்த பாடநெறிகள் ஆராய்ச்சி பாடநெறிகள் என்பது. | மாணவர்களின் ஈர்ப்பினை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது பட்டமல்லாத 6 பாடநெறிகளுக்காக 220 மாணவர்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது 7 பட்டமல்லாத பாடநெறிகளுக்கு 271 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் போது 2020 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக மூன்று பாடநெறிகளின் மாணவர்களின் பதிவு குறைவடைந்திருந்ததுடன், அவற்றுள் ஒரு பாடநெறிக்கு எந்தவொரு மாணவரும் பதிவு செய்திருக்கவில்லை.<br><br>அவ்வாறே, 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 11 பட்டமல்லாத புதிய பாடநெறிகளை புதிதாக அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் எந்தவொரு பாடநெறியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் பெரும்பாலான விண்ணப்பதாரிகள் வெளிநாடு சென்றிருந்தமை, வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்விக்காக சென்றிருந்தமையால் குறைவாக பதிவு செய்திருந்த Certificate Course in Cultural Tourism பாடநெறியுடன் Diploma in Archaeology Cultural Tourism பாடநெறிக்கு இணங்க பாடவிதானங்கள் உருவாக்கப்பட்டு சுற்றுலாத்துறையின் தொழில்களில் ஈடுபட்டுள்ள வழிகாட்டுநர்கள் போன்ற குழுக்களை இலக்காக கொண்டு விரிவுரைகள் நடாத்தப்படுகின்றது என்பது.<br><br>இந்த புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு போதிய கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் பற்றாக்குறை நிலவுகின்றமையால் அந்த பாடநெறிகளை ஆரம்பித்தல் தாமதமாகியுள்ளமை. | காலத்திற்கு ஏற்ப முக்கியத்துவம் வாய்ந்த அதிக கேள்வியுள்ள பாடநெறிகளை அறிமுகப்படுத்தி மாணவர் ஈர்ப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆராய்ச்சிக் புத்தகங்களை சமர்ப்பித்திருந்த 29 மாணவர்கள் தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது 13 சந்தர்ப்பங்களின் மாணவர்களால் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ஆராய்ச்சி நூல்களை பரிசோதகர்களுக்கு வழங்குதவறகு 30 முதல் 91 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | பட்டத்திற்குரிய ஆராய்ச்சி நூல்கள் சமர்ப்பிக்கப்பட்ட மாதத்தில் கல்விசார் குழு கூடினால் அதற்கடுத்த மாதத்தில் நடாத்தப்படும் கல்விசார் சபைகளால் பரிசோதகர்கள் நியமிக்கப்படுவர், சில சந்தரப்பங்களில் நியமிக்கப்படும் ஆராய்ச்சியாளர்கள்ஆராய்ச்சி நூல்களை பரிசோதித்தல் | முறையான காலச்சட்டகத்தின் கீழ் பரிசோதித்து, பெறுபேறுகளை தாமதமின்ற பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அவ்வாறே பரிசோதிப்பதற்காக முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட நூல்களை பரிசோதித்து மீண்டும் சமர்ப்பிக்கும் போது 90 நாட்களை விட அதிக நாடகள் கடந்திருந்த 14 சந்தர்ப்பங்ள் நிலவின.

நிராகரிக்கப்படும் போது மீண்டும் அதற்கடுத்த கல்விசாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் மேற்குரித்த பரிசோதகர்களை நியமிக்க கல்விசார் பதவியணியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேற்குறித்த பரிசோதகர்களை நியமித்தல் கல்விசார் நடைமுறையில் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறையொன்று என்பதால் அதனை புறக்கணிக்கவோ மாற்றியமைக்கவோ முடியாது.